www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

## எட்டாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 50

பகுதி - 1

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:- 6×1=6

1) பசியால் வாடும் ________ உணவளித்தல் நமது கடமை
   அ) பிரிந்தவர்க்கு ஆ) அலந்தவர்க்கு
   இ) சிறந்தவர்க்கு ஈ) உயர்ந்தவருக்கு
2) பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ________
   அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள்
   இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்
3) 'செம்மரம்' என்னும் சொல் ________ த் தொகை
   அ) வினை ஆ) பண்பு இ) அன்மொழி ஈ) உம்மை
4) சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது ________
   அ) வேற்றுமைத்தொகை ஆ) உம்மைத்தொகை
   இ) உவமைத்தொகை ஈ) அன்மொழித்தொகை
5) அரசரை அவரது ________ காப்பாற்றும்
   அ) செங்கோல் ஆ) வெண்கொற்றக்குடை
   இ) குற்றமற்ற ஆட்சி ஈ) படை வலிமை
6) தோட்டத்தில் தம்பி ஊன்றிய ________ எல்லாம் முளைத்தன
   அ) சத்துகள் ஆ) பித்துகள் இ) முத்துகள் ஈ) வித்துகள்

ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக. 6×1=6

1) வீணை ________ நரம்புகளைக் கொண்டது.
2) பொருள் தருக:- 1. பழவெய் 2. வாரி
3) பிரித்து எழுதுக:- 1. கனகச்சுனை 2. கண்ணோடாது
4) சேர்த்து எழுதுக:- 1. கயிறு + கட்டில் 2. கதிர் + ஈன
5) சரியான இணைச்சொற்களை இட்டு நிரப்புக
   1. ஆற்று வெள்ளம் ________ பாராமல் ஓடியது. (மேடுபள்ளம்/ஈடுஇணை)
   2. சான்றோர் எனப்படுபவர் ________ களில் சிறந்தவர் ஆவர். (ஆடல் பாடல் / கல்வி கேள்வி)
6) உரிய வேற்றுமை உருபுகளை எழுதுக.
   1. திருவாசகம் படித்தான் ________ (கு/ஐ)
   2. தலைவணங்கு ________ (ஆல்/இன்)

பகுதி - 2

இ) 1) தொடரின் வகைகளை எழுதுக. 2×1=2
   1. பாடி முடித்தான் 2. கண்ணா வா

CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2) அகர வரிசைப்படுத்துக. 2
படகம், தவில், கனைப்பறை, பேரியாழ், உறுமி, உடுக்கை, தவண்டை, பிடில், நாககரம், மகுடி

3) கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு நிரப்புக. 2×1=2
1. இடி ________ மழை வந்தது. (உடன்/நின்று)
2. தமிழைக் ________ சுவையான மொழியுண்டோ! (காட்டிலும்/விட)

4) நிரப்புக. 2×1=2
1. பறை ஒரு ________ கருவி
2. தமிழ்நாட்டின் மாநில மரம் ________

5) கலைச்சொற்களை எழுதுக. 2×1=2
1. Flute 2. Basketry

## பகுதி - 3

ஈ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:- 5×2=10
1) தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?
2) பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
3) பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
4) தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5) சிறந்த சொல்லாற்றலின் இயல்பு என்ன?
6) உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?
7) மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?

உ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:- 2×3=6
1) நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.
2) மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.
3) அன்மொழித் தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4) மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.

## பகுதி - 4

ஊ) அடிபிறழாமல் எழுதுக:- 3+2=5
அ) 'ஆற்றுதல்'- எனத் தொடங்கும் பாடறிந்து ஒழுகுதல் பாடலை அடிமாறாமல் எழுதுக.
ஆ) "சொல்" என முடியும் குறளை எழுதுக.

## பகுதி - 5

எ) எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி:- 1×7=7
1) தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.
2) மழைவளம் பெருக நாம் செய்ய வேண்டுவன யாவை?
3) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

********

CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com